ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (22-4-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

44. நமக்கு நாமே திட்டப் பணிகளின் மதிப்பீடுகளில் அரசின் பங்களிப்பு 50 விழுக்காடு மற்றும் அதற்குக் குறைவான அளவுள்ள இனங்களில் பங்களிப்பாளர்கள் விருப்ப அடிப்படையில் அவர்களாகவே அப்பணியை நிறைவேற்ற வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அறிவிக்கையிட்டது குறித்து நிதித்(சம்பளங்கள்) துறையின் 14-11-2007 ஆம் நாளிட்ட 548 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நடைமுறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

45. டெல்லி மெட்ரோ இரயில் நிறுவனத்தை சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்காக ஓராண்டு காலத்திற்கு இடைக்கால ஆலோசகர்களாகவும், அதன் பின்னர் பிரதான ஆலோசகர்களாகவும் நியமிப்பதற்காக அறிவிக்கையிட்டது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 13-2-2008 ஆம் நாளிட்ட 45 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நடைமுறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

16. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஐம்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-அ பிரிவின்படி பேரவையின் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

17. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 15 பிரிவின்படி பேரவையின் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

104. மானியக் கோரிக்கை எண் 43-சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

105. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம் 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

106. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2008. (தமிழ், ஆங்கிலம்)

107. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009 (தமிழ்)

108. உடுக்குறியிடாத வினாக்களின் விடை அடங்கிய பட்டியல். (ஐந்தாவது பட்டியல்) (வினா எண்கள் [illegible] முதல் [illegible] வரை)